ந.க.அ4/E-3179967/2025

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,

வேலூர் மாவட்டம்,

வேலூர்-9.

நாள்: 28.04.2025

சித்திரை 15, திருவள்ளுவர் ஆண்டு - 2056.

# அறிவிக்கை

பொருள்: உள்ளூர் விடுமுறை – வேலூர் மாவட்டம் – குடியாத்தம் வட்டம் மற்றும் நகரம் – அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் சிரசு ஊர்வல திருவிழா – பிரதி ஆண்டு நடைபெற்று வருதல் – இவ்வாண்டு நடைபெறும் நாளான 15.05.2025 தேதியன்று **வியாழன்கிழமை** உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

பார்வை: அரசாணை(நிலை) எண்.154, பொது(பல்வகை)த் துறை, நாள்.03.09.2009

******

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம் மற்றும் நகரத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள புகழ் வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் சிரசு ஊர்வல திருவிழா 15.05.2025 அன்று **வியாழன்கிழமை** நடைபெற உள்ளதால், அவ்வமையம் பொதுமக்கள், அரசு அலுவலர்கள் மற்றும் ஏனையோர் கலந்துக்கொள்ள வசதியாக, குடியாத்தம் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோயில் சிரசு ஊர்வல திருவிழா நடைபெறும் நாளான 15.05.2025-ஆம் தேதி வியாழன்கிழமை வேலூர் மாவட்டம் முழுவதும் உள்ளூர் விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. அதற்கு பதிலாக 14.06.2025 அன்று சனிக்கிழமை அரசு அலுவலர்களுக்கு வேலை நாளாகவும், 15.06.2025 அன்று ஞாயிற்றுக்கிழமை அச்சக பணியாளர்களுக்கு வேலை நாளாகவும் அறிவிக்கப்படுகிறது.

2) இந்த உள்ளூர் விடுமுறை நாள், செலவாணி முறிச் சட்டம் 1881 (Under Negotiable Instruments Act, 1881) -ன் கீழ் வராது என்பதால் மேற்படி உள்ளூர் விடுமுறை நாளான 15.05.2025 அன்று கருவூலங்களிலும், சார்நிலை கருவூலங்களிலும், அரசு பாதுகாப்புக்கான அவசர அலுவல்களை கவனிக்கும் பொருட்டு குறிப்பிட்ட பணியாளர்களோடு செயல்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

ஒம்/-வே.இரா.சுப்புலெட்சுமி,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.

//ஆணைப்படி//

மாவட்ட ஆட்சியருக்காக,
வேலூர்.

பெறுநர்:

1. வேலூர் மாவட்ட அனைத்து துறை தலைவர்கள்.
2. வேலூர் மாவட்ட அனைத்து வருவாய் சார்நிலை அலுவலர்கள்.
3. வேலூர் மாவட்ட அனைத்து வணிக நிறுவனங்கள்.

நகல்: மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்.